# சொல் ( இலக்கணம்)

# சொல் - பொருள்

- சொல் என்பது ஒரெழுத்தாலோ, பலவெழுத்துக்களாலோ ஆக்கப்பட்டு ஒரு *பொருளைத் தரும்* மொழிக்கூறு.

- சொல்லைக் *கிளவி*, <u>**பதம்**</u> என்றும் கூறுவது உண்டு.

# சொல்லின் வகைகள்

- 1. பெயர்ச்சொல்
  2. வினைச்சொல்
  3. இடைச்சொல்
  4. உரிச்சொல்

# பெயர்ச்சொல்

- ஒன்றன் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுவது **பெயர்ச்சொல்**ஆகும். மரம், கல், மண் முதலியன பெயர்ச்சொற்கள் ஆகும்.
- எ:கா: பாண்டியன், குழலி, கண்

# வினைச் சொல்

- ஒரு செயலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.
- (எ:கா) கற்றான், நிற்கிறாள், வருவார்

# இடைச்சொல்

- தனித்து இயங்காமல் பெயருடன் அல்லது வினையுடன் சேர்ந்து வரும் சொற்கள் **இடைச்சொற்கள்** எனப்படும்.
- இடைச்சொற்கள் தனித்துப் பொருள் தருவதில்லை.

# உரிச்சொல்

- 1.பல வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தி வரும். (பண்பு - குணம்)
- 2.பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து வரும்.
- 3.ஒரு சொல் ஒரு பொருளை உணர்த்துவதாகவும், ஒருசொல் பல பொருளை உணர்த்துவதாகவும் இருக்கும்.
- 4.செய்யுளுக்கு உரியதாய் வரும்.